# அபிவிருத்தி லொத்தர் சபை

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

(1997 இன் 20 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.)

DLB DEVELOPMENT LOTTERIES

# அபிவிருத்தி லொத்தர் சபையின் கீழுள்ள பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

## 1. பொது முகாமையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு

**பதவியின் பெயர்** : **பொது முகாமையாளர்**

**வெற்றிட பதவி எண்ணிக்கை** : **01**

**சம்பள குறியீடு** : **HM 2-1**

- முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவு ரூபா 161,140 – 12 x 4850 – 219,340 என்பதோடு, சேவைக்கு இணைக்கப்பட்ட திகதி தொடக்கம் ரூபா 161,140/- அடிப்படைச் சம்பளப் படிக்கு வைக்கப்படும்.

**கல்வி மற்றும் தொழில் தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களின் ஆட்சேர்ப்பு (கீழ் குறிப்பிடப்பட்ட 1.1 அல்லது 1.2)**

1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ கணக்கியல் அல்லது துறைக்கு தொடர்புடைய ஆரம்ப பட்டம் ஒன்று.

**அத்துடன்**

வர்த்தக நிர்வாகம்/முகாமைத்துவம்/வர்த்தகம்/கணக்கியல் அல்லது துறைக்கு தொடர்புடைய துறை ஒன்றில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல், அல்லது முகாமைத்துவம் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இணை அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

**மற்றும்**

பட்டப்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியானர் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் பதவிகளில் குறைந்தது 20 ஆண்டுகள் சேவை அனுபவம் (குறைந்தது இதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும்.)

**அல்லது**

1.2 வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ கணக்கியல் அல்லது துறைக்கு தொடர்புடைய வேறு துறை ஒன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ கணக்கியல் அல்லது துறைக்கு தொடர்புடைய வேறு துறை ஒன்றில் கலாநிதிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

கலாநிதி பட்டம் ஒன்றைப் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம் ஒன்றில், சட்டரீதியான சபை ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்து 05 சிறந்த சேவை பதிவு ஒன்றை பெற்ற அதிகாரி ஒருவராக அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

**1.3 உள்ளக விண்ணப்பதாரர்கள்**

அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் தொடர்புடைய துறையில் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் பல்நோக்கு பணிகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்காக தலைமைத்துவத்தை வழங்கல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களை செயல்திறனுடன் நிர்வகித்தலில் பிரத்தியேக தேர்ச்சி

**1.4 வயது** : 35 வயதுக்கு குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**1.5 நிதி நன்மைகள்**

i. முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இல் HM 2.1 பதவிக்கு தொடர்புடைய அடிப்படைச் சம்பளம்

ii. நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற கொடுப்பனவுகள்

iii. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% நிறுவனத்தினால் வழங்கப்படும்.

iv. அரச நிர்வாக சுற்றுநிருபம் 01/2015 மற்றும் அதன் உப ஏற்பாடுகளுக்கு அமைய ஓட்டுநர் ஒருவர் மற்றும் எரிபொருளுடன் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று வழங்கல்

**1.6 குறிப்பு: இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு:**

மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் 02 ஆண்டு காலத்திற்கு அரச சேவையில் இருந்து விடுதலை பெற்று இணைய முடியும் என்பதோடு, குறித்த விண்ணப்பங்கள் அந்த விண்ணப்பதாரர் பணியாற்றும் திணைக்களம்/ நிறுவனத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்பட்டால் விடுவிக்க முடியும் என குறிப்பிட்டு குறித்த திணைக்களம்/ நிறுவனத் தலைவரினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றும் விண்ணப்பத்திற்கு இணைத்து அனுப்புதல் வேண்டும்.

## 2. வலய முகாமையாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு

**பதவியின் பெயர்** : **வலய முகாமையாளர் தரம் II**

**வெற்றிட பதவி எண்ணிக்கை** : **02**

**சம்பள குறியீடு** : **JM 1-1**

(முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவு ரூபா 72,650 – 10 x 1360 – 18 x 2040-122,970 என்பதோடு, 2027.01.01 ஆம் திகதிக்கு ரூபா 72,650/- அடிப்படைச் சம்பளப் படிக்கு வைக்கப்படும்.)

**கல்வி மற்றும் தொழில் தகைமை**

**வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளல் (கீழுள்ள 2.1 அல்லது 2.2)**

(2.1) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/முகாமைத்துவம்/வர்த்தக நிர்வாகம்/ வர்த்தகம்/ விஞ்ஞான துறைகள்/வர்த்தக விஞ்ஞானம் அல்லது அதற்கு இணையான விடயப் பரப்புகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் அத்துடன் தகுதி பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையின் நிறுவனம் ஒன்றுக்கு தொடர்புடைய துறை தொடர்பில் குறைந்தது 03 ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(2.2) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/ முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ வர்த்தகம்/ விஞ்ஞான துறைகள்/ வர்த்தக விஞ்ஞானம் அல்லது அதற்கு இணையான விடயப் பரப்புக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவத்துடன் தகுதியை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையின் நிறுவனம் ஒன்றில் குறித்த துறை தொடர்பில் குறைந்தது 03 ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளல் (கீழுள்ள 2.3 அல்லது 2.4)**

2.3 மேற்ப வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

2.4 அபிவிருத்தி லொத்தர் சபையின் "முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத" (MA1) சேவை வகுதியின் II ஆம் தரத்தில் இப் பதவியுடன் சம்பந்தப்பட்ட விடயத்துறையில் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

2.5 **வயது:** 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

2.6 மாதத்திற்கு ரூபா 150,000/- அளவு தொகையை ஈட்டுவதற்கு முடியுமாக இருப்பதோடு, அது மாதாந்தம் மாறுபடும்.

2.7 தேவையான மேலதிகத் தகைமை:-

தமிழ் மொழியில் பேசுதல், வாசிக்கும் திறன் மற்றும் வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் கடமையாற்றும் திறன் விசேட தகைமையாக கருதப்படும். செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்துடன் மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள் ஓட்டும் திறன் இருத்தல் வேண்டும்.

## 3. விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு

**பதவியின் பெயர்** : **விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் தரம் III**

**வெற்றிட பதவி எண்ணிக்கை** : **01**

**சம்பள குறியீடு** : **MA 3**

2026 ஆம் ஆண்டுக்கு வழங்கும் அடிப்படைச் சம்பளம்: ரூபா 49,831/-

(முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவு ரூபா 53,940 –10x800–11x1190–10 x 1320–5x1350–94,980 என்பதோடு, 2027.01.01 ஆம் திகதிக்கு ரூபா 53,940/- அடிப்படைச் சம்பளப் படிக்கு வைக்கப்படும்.)

**கல்வி மற்றும் தொழில் தகைமை (கீழுள்ள 3.1 அல்லது 3.2)**

3.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/வர்த்தகம்/ வணிகம்/ முகாமைத்துவம்/ பொருளாதார விஞ்ஞானம் போன்ற துறைக்கு தொடர்புடைய பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் அத்துடன் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா/ உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவுடன் குறித்த துறையில் 01 ஆண்டு சேவை அனுபவம்.

3.2. வயது: 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

3.3 மாதத்திற்கு ரூபா 121,000/- அளவு தொகையை ஈட்டுவதற்கு முடியுமாக இருப்பதோடு, அது மாதாந்தம் மாறுபடும்.

3.4 தேவையான மேலதிகத் தகைமை:-
துறைசார் விற்பனை மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டிருத்தல், செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் ஒன்று இருப்பதுடன் மோட்டார் சைக்கிள் ஓட்டும் திறன், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உள்ள திறன், தமிழ் மொழியில் பேசுதல், எழுதுதல் மற்றும் புரிந்துகொள்ளும் திறன்.

## 4. தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு

**பதவியின் பெயர்** : **தகவல் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III**

**வெற்றிட பதவி எண்ணிக்கை** : **01 (தகவல் பாதுகாப்பு அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)**

**சம்பள குறியீடு** : **MA 3**

2026 ஆம் ஆண்டுக்கு வழங்கும் அடிப்படைச் சம்பளம்: ரூபா 49,831/-

(முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவு ரூபா 53,940 – 10 x 800 – 11 x 1190 – 10 x 1320 – 5 x 1350 – 94,980 என்பதோடு, 2027.01.01 ஆம் திகதிக்கு ரூபா 53,940/- அடிப்படைச் சம்பளப் படிக்கு வைக்கப்படும்.)

**கல்வித் தகைமை:-**

4.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பட்டம் ஒன்றை பெற்றிருப்பதோடு குறித்த துறையில் 01 ஆண்டு சேவை அனுபவம்

விசேட தகைமை:- இந்தப் பதவிக்காக Cyber Security கோட்பாடு மற்றும் Frameworks தொடர்பில் வலுவான அடிப்படை அறிவு, EDR/XDR, Email Security Gateway, WAF போன்ற பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் தொடர்பான புரிதல், Firewalls, IDS/IPS, VPN போன்ற வலைப்பின்னல் பாதுகாப்பு கருவிகள் தொடர்பான அறிவு, Nessus, Burp Suite போன்ற Risk Management மற்றும் Security Scanning Tools உடன் பரிச்சயம், Encryption, PKI மற்றும் Certificate Management தொடர்பில் அடிப்படை அறிவு மற்றும் Incident Response மற்றும் Digital Forensics அடிப்படை விடயங்கள் தொடர்பில் அறிவு இருப்பது எதிர்பார்க்கப்படுகிறது.

4.2 **வயது:** 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

4.3 மாதத்திற்கு ரூபா 130,000/- அளவு தொகையை ஈட்டுவதற்கு முடியுமாக இருப்பதோடு, அது மாதாந்தம் மாறுபடும்.

## 5. கள மேம்பாட்டாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு

**பதவியின் பெயர்** : **கள மேம்பாட்டாளர்**

**வெற்றிட பதவி எண்ணிக்கை** : **01**

**சம்பள குறியீடு** : **PL-1**

**2026 ஆம் ஆண்டுக்கு வழங்கும் அடிப்படைச் சம்பளம்: ரூபா 38,488/-**

(முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவு ரூபா 40,500–10x450–10x490–7x540–15x590–62,530 என்பதோடு, 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் ரூபா.40,500/- அடிப்படைச் சம்பளப் படிக்கு வைக்கப்படும்.)

**கல்வி மற்றும் வேறு தகைமைகள்**

5.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களின் ஆட்சேர்ப்பு

க.பொ.த (சா./ தர) பரீட்சைக்கு உட்பட்டவர்களின் 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சிற்றி பெற்றிருப்பதுடன் விற்பனை மேம்பாட்டுத் துறையில் ஓர் ஆண்டு சேவை அனுபவம்.

5.2 **வயது:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

5.3 மாதத்திற்கு ரூபா 90,000/- அளவு தொகையை ஈட்டுவதற்கு முடியுமாக இருப்பதோடு, அது மாதாந்தம் மாறுபடும்.

5.4 தேவையான மேலதிக தகைமைகள்:-

- துறைசார் விற்பனை மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டிருத்தல், செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் ஒன்று இருப்பதுடன் மோட்டார் சைக்கிள் ஓட்டும் திறன், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உள்ள திறன், தமிழ் மொழி பேசுவது, எழுதுவது மற்றும் புரிந்துகொள்ளும் திறன்.

## 7. பொது நிபந்தனைகள்

7.1 நியமன பண்பு:- ஊழிய சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையது.

7.2 நிதி நன்மைகள்

a) சேவைச் சுற்றுநிருபத்தின் 01/2025 ஏற்பாடுகளுக்கு அமைய பதவிக்கு தொடர்புடைய சம்பளம்

b) நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற கொடுப்பனவுகள் (ஊக்கக் கொடுப்பனவு, வருகை கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு...)

c) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% நிறுவனத்தினால் செலுத்தப்படும்.

d) நிரந்தர பணிக் குழுவுக்காக வெளி மற்றும் உள்ளக மருத்துவ சிகிச்சை வழங்கும்போது மருத்துவ உதவி வசதிகள்.

7.3 வேறு: அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, பதவிக்கு வழங்கப்படுகின்ற பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**7.4 ஆட்சேர்ப்பு முறை:-**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு அரச வர்த்தமானி அறிவித்தல் அல்லது பகிரங்க அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் விண்ணப்பங்களை கோரிய பின் அந்தந்த பதவிக்குத் தொடர்புடையதாக எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபை ஒன்றின் மூலம் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் முடிவு (வாய்மொழி/ எழுத்து அல்லது நடைமுறையில் முன்வைக்கும் சோதனை) அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

பணியின் பண்புக்கு அமைய ஆங்கில மொழி பேசும், எழுதும் மற்றும் புரிந்து கொள்ளும் திறன் தேவை என்பதோடு, அது நேர்முகப்பரீட்சையில் சோதிக்கப்படும்.

## 8. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி:- 2026.10.09

அனைத்து கல்விச் சான்றிதழ்கள், தொழில் தகைமைகளை காண்பிக்கும் சான்றிதழ்கள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பிலான சான்றிதழ்களின், தம்மால் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் அபிவிருத்தி லொத்தர் சபை உத்தியோகபூர்வ இணையதளத்தில் (https://www.dlb.lk/careers/view) உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2026.10.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு, விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பங்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் மனித வளம் மற்றும் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டிக்கு கொண்டுவந்து இடுவதற்கு வேண்டும். அமைச்சு/ திணைக்களம்/ மற்ற அரச நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**அபிவிருத்தி லொத்தர் சபை**
**இலக்கம் 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு 02**